02-02-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : போருக்குப் பின் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

**தொடக்கவுரையாடல் : மாவை. நித்தியானந்தன்**

**ஆதித்தன் :**

கல்வி

உரையாளர் சுட்டியது போல கல்வியில் வடக்கில் முன்னேற்றம் நிகழ்கிற போதும் போருக்கு பின்னான சூழலில் மாணவர்களை இயல்பு நிலைக்கு அழைத்து செல்லும் வகையில் கல்வி வடிவமைக்கப்படவில்லை

அதே வேளை மாணவர்கள் கடந்தகால துயர சம்பவங்களால் கல்வியில் புலனை செலுத்துவதற்கு தடைகள் உள்ளன

அதீதபயம் நோய்கள் பொருளாதாரம் .......etc

பண்பாடு

பண்பாடு சீரழிவு விடயங்களில் ராணுவ புலனாய்வாளர்களின் பங்கு கணிசமானது பிரதானமாக பெருவர்த்தக நிறுவனங்களுடன் அவர்கள் இணைந்து நடத்தும் இரவுநேர களியாட்டநிகழ்வுகள் மது மற்றும் இதர விடயங்களுடன் பகிரங்கத்தில் நடக்கின்றன. அதே வேளை தனியார் தொலைக்காட்சிகளும் வானொலிகளும் திட்டமிட்டு கட்டற்ற நுகர்வுகலாச்சாரத்துக்கு மக்களை அடிமையாக்க முயல்கின்றன.

குறித்த சில இணைய ஊடகங்களும் செய்திகளை வெளியிடும் பாணி ஆபாசமானதாக இருக்கிறது.

பொருளாதாரம்

இதில் யாழ்ப்பாணத்தை தனியாகவும் வன்னியை தனியாகவும் நோக்க வேண்டும்

அண்மையில் புளிவிபர திணைக்களம் வெளியிட்ட தரவுகளின் பிரகாரம் இலங்கையில் வாழ்க்கை செலவு கூடிய மாவட்டம் யாழ்ப்பாணம் என அடையாளப்படுத்த முடிகிறது. இதற்கு முதன்மைக்காரணம் வெளிநாட்டு வருவாயால் திடீரென தோன்றியிருக்கும் நடுத்தர வர்க்கம் எழுப்பும் வரன்முறையற்ற கேள்விக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் யாழின் பொருளாதாரம் உப்பியிருக்கிறது ஆனால் சராசரிக்கும் குறைந்த வருமானம் உடையோர் இதால் பாதிப்படைந்துள்ளனர்.

வன்னியில் உத்வேகம் அடையும் பொருளாதார செயற்பாடுகளின் பின்னணியிலும் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதிலோ பொருளாதார மீட்சியிலோ அப்பிரதேசம் தோல்வி அடைகிறது.இதற்கு அங்கிருந்து பொருளாதார பயன்களில் நடக்கும் வெளிபாய்ச்சல் தான் காரணம். எண்ணற்று பரவியிருக்கும் நிதிநிறுவனங்கள் அந்த பொருளாதாரத்தை வெற்றிகரமாக கண்ணுக்கு தெரியாமல் சுரண்டுகின்றன,அத்துடன் பொருளாதாரத்தை இஸ்திர படுத்தும் நெறிப்படுத்தும் கட்டமைப்புகளும் இல்லை.


இவற்றிற்கு தீர்வாக கிராமிய சிறிய பொருளாதார அலகுகளை முன் மொழிகிற போதும் ஏற்கனவே இருக்கும் அலகுகளின் மீதான இறுக்கமான கண்காணிப்பும் இக்கட்டமைப்புகளை அரசியல் நோக்கங்களுக்காக பயன் படுத்துவோரும் சுஜாதீனமாக செயற்பட அன்மதிக்காததால் பயனாளிகளை உதவிகள் சென்றடைவது சிக்கல்

இளைஞர்கள் பலர் வேலை இல்லாது இருப்பதாகவும் அவர்கள் வேலைக்கு செல்வதில்லை என்பதன் பின்னணியில் வடக்கு இளைஞர்கள் பெரும்பாலானவர்கள் வெளிநாடு செல்ல ஆர்வமாக இருக்கிறார்கள் என்பது அதற்காக தரகர்கள் பலர் செயற்படுவதும் பணத்தையும் உயிரையும் பணையம் வைத்து இளைஞர்கள்வெளிநாடு செல்வதையும் காண முடிகிறது

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**தமிழ் மக்கள் முன்னால் உள்ள மூன்று தெரிவுகள்**
09-02-2012



தஸ்தயெவ்ஸ்கி

ஃபியோதர் மிக்கைலோவிச் தஸ்தயெவ்ஸ்கி (Fyodor Mikhailovich Dostoevsky), நவம்பர் 11, 1821 - பெப்ரவரி 9, 1881) ஒரு ரஷ்ய புதின எழுத்தாளரும், புனைகதை எழுத்தாளரும் ஆவார். குற்றமும் தண்டனையும் (Crime and Punishment), கராமாசோவ் சகோதரர்கள் (The Brothers Karamazov) என்பன இவரது ஆக்கங்களில் முக்கியமானவை.
இவரது இலக்கியங்கள், 19 ஆம் நூற்றாண்டின் ரஷ்யச் சமூகத்தில் குழப்பநிலையில் இருந்த அரசியல், சமூக, ஆன்மீகப் பின்னணியில் மனித உளவியலை ஆராய்கின்றன. பலர் இவரை 20 ஆம் நூற்றாண்டு இருப்பியல்வாதத்தின் நிறுவனர் அல்லது முன்னோடி எனக் கருதுகின்றனர்.

**இவரது நூல்கள் தமிழில்**

1. குற்றமும் தண்டனையும்
2. கராமாசோவ் சகோதரர்கள்
3. சூதாடி
4. வெண்ணிற இரவுகள்
5. மரணவீட்டின் குறிப்புகள்
6. இடியட் (அசடன்)

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## போருக்குப்பின் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

*மதன்:*

யுத்தத்திற்கு பின்னர் வடக்கிலுள்ள மக்களின் நிலை என்னும்போது நாம் இரண்டு பிரதேசங்களாக பிரித்து பார்க்க வேண்டும். அதாவது யாழில் யுத்தம் முடிந்து கிட்டத்தட்ட 16 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் யாழுக்கும் தலைநகருக்கும் இடைப்பட்ட வன்னியில் யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள்தான் ஆகின்றன. ஆகையினால் எமது பார்வை அதிகமாக வன்னி பிரதேசத்திலேயே இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தமட்டில் அங்குள்ள மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு அளவுக்கதிகமாகவே வருவாய் இருக்கிறது. இதற்கு காரணம் புலம்பெயர்ந்துள்ள அவர்களது சொந்தங்கள். அவர்கள் புலம்பெயர்கின்ற சந்தர்ப்பத்தில் இருந்த யுத்த நெருக்கடி, கஷ்டங்களை மனதிற்கொண்டு - யாழிலுள்ள தமது சொந்தங்கள் அதுபோன்ற கஷ்டங்களை அனுபவிக்கக்கூடாது என்பதற்காக தேவைக்கு அதிகமாகவே பணம் அனுப்புகிறார்கள். இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்ற இளைஞர் சமுதாயம் தீய வழிகளில் அந்த பணங்களை செலவு செய்கின்றனர். நாங்கள் வெளிநாடு செல்வதற்கு காத்திருக்கின்றோம் என்பதை தகுதியாக கருதி, வேலை செய்யாமல் பலர் சுற்றி திரிகிறார்கள். இவர்களுக்கு நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றைய கட்டாய தேவையாக இருக்கிறது.

படையினரோடும் மக்களோடும் நெருங்கிப் பழகுபவன் என்ற ரீதியில் சில உண்மைகளை சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக யாழிலுள்ள இளைஞர்களுடன் இராணுவத்தினரும் பொலிஸாரும் சகஜமாக பழகுகிறார்கள். இதனை இராணுவம் தனது புலனாய்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகிறது. ஆனால், நமது இளைஞர்கள் அதனை உணராமல் "எனக்கு நாலு ராணுவத்த தெரியும்" என்று சொல்வதை பெருமையாக கருதுகிறார்கள். இதனை விளைவுகள் எப்படி இருக்கும் என்பது பற்றி குறிப்பாக இளைஞர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

தெரிந்தோ தெரியாமலோ விடுதலைப் போராட்டம் - இன்றை வடக்கு இளைஞர்களின் மத்தியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. புலிகள் இருந்த காலத்தில் கலப்பு திருமணம் என்பது சகஜம். அதாவது வேற்று ஜாதி மக்களை கலப்பு திருமணம் செய்வதற்கு புலிகள் ஆதரவு வழங்கினர். புலிகளின் காலத்தில் கலப்பு திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்ந்தவர்கள் இறுதி யுத்திற்கு பின்னர் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக ஒரு பெண் தனது கணவனை இறுதி யுத்தத்தில் இழந்துவிட்டால், அந்தப் பெண்ணை தற்போதைய சூழ்நிலையில் அவளது சொந்தங்கள் தங்களது வீட்டிலிருந்தும் சமூகத்திலிருந்தும் ஒதுக்கி வைக்கின்ற சூழ்நிலை காணப்படுகிறது. இதனால் நாதியற்ற அந்த பெண்கள் வேறு வழியில்லாமல் தவறான வழிசெல்லும் சந்தர்ப்பங்களும் உருவாகியிருக்கின்றன. எனவே இதுபோன்ற விடயங்களிலும் நாங்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்ததாக வன்னியினை நாம் பார்க்க வேண்டும். அண்மையில் பரந்தனிலிருந்து முல்லைத்தீவு நோக்கி செல்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. பாதை அபிவிருத்திகள் அமோகமாக நடைபெற்று வருகின்றன. இரு மருங்கிலும் பச்சைப்பசேலென்ன வயல்வெளிகள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்து காணப்படுகிறது. ஆனால், அங்கொன்றும் இங்கொன்றுமாக வீடுகள். அதில் இருப்பவர்களுக்கு பேச்சுத்துணைக்குகூட ஆட்கள் இல்லை. அவர்கள் வெறிச்சோடி காணப்படுகிறார்கள். எனவே இறுதி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அம்மக்களுக்கு தற்போதைய தேவை பலருடன் சகஜமாக பேசிப்பழகுவது. பேச்சின் மூலமாக அவர்களின் பழைய வடுக்களை ஓரளவேனும் குறைக்க முடியும். அதுமட்டுமல்ல இறுதி யுத்தம் நடைபெற்ற இடங்களில் இருக்கின்ற ஆடு, மாடுகள்கூட சோர்வுற்றே காணப்படுகின்றன. இது வெடி மருந்துகளின் தாக்கமாகக்கூட இருக்கலாம். மனிதர்களையும் இந்த விளைவு பாரியளவில் தாக்கி வருகிறது என்ற கசப்பான உண்மையையும் அறிய முடிகிறது.

## தமிழ் மக்கள் முன்னால் உள்ள மூன்று தெரிவுகள்

**இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு.**

1. போருக்குப்பின்னான, தமிழரின் தற்போதைய அரசியல் சூழல்
2. தேக்க நிலைமை.
3. இன்றைய நிலைக்கான அரசியற் காரணங்களும் பின்னணியும்.
4. தமிழர் முன்னாலுள்ள மூன்று விதமான அரசியற் தெரிவுகள்.
5. முதலாவது தெரிவாயமையும் இணக்க அரசியல், பேரம் பேசல், எதிர்ப்பு செயற்பாடு, பாராளுமன்ற அரசியல்.
6. இரண்டாவது தெரிவாயமையும் தமீழக்கோரிக்கை/வேறு விதமான பிரிந்து செல்லும் போக்கு.
7. மேற்கண்ட இரு போக்குகளும் அரசியல் ரீதியாக எமக்குத் தந்துள்ள அனுபவங்கள்.
8. மூன்றாவது போக்கு எப்படியானதாயிருக்கலாம் என்பது பற்றிய உரையாடல்.

## வலை

### மக்களை அடிமையாக்கி ஆள்வதை கொண்டாடும் தினந்தான் 'சுதந்திரதினம்

நாடெங்கும் கொண்டாடப்படும் 'சுதந்திர தினம்' யாருக்கானது, எவருக்கான சுதந்திரம் இந்த நாட்டில் இருக்கிறது என்பது பற்றி அலசும் கட்டுரை

இலகு முகவரி : **valai.thulaa.net/62**

http://www.ndpfront.com/?p=29660

### ஏனிந்த அணு உலை வெறி?

ஈரானில் அணு உலை கட்டினால் தடுக்க முனையும் சர்வதேச சமூகம், இந்தியாவில் கட்டினால் வாயை மூடிக் கொண்டிருக்கியது. அணு உலைகளுக்கு எதிரான போராட்டம், உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இலகு முகவரி : **valai.thulaa.net/63**

http://www.vinavu.com/2012/02/08/the-nuclear-craze/

### சாம்பல் பூத்த மேட்டில் இருந்து..

இவ் உரையாடல், விபச்சாரத்தை தொழில் என வர்ணித்து பெண்கள் சந்திப்பு மலர் வெளியிடும் மேல்தட்டு வர்க்கப் பெருமாட்டிகளுக்கும், யுத்தத்தால் தமிழன் மட்டும்தான் எல்லாம் இழந்தார் என கதறும் குறும் தேசியவாதிகளுக்கு, சிந்தனை மாற்றம் வேண்டி எழுதப்படுகிறது. இது..... வெறும் கதையல்ல

இலகு முகவரி : **valai.thulaa.net/64**

http://www.ndpfront.com/?p=29648

### ஒரு பயணத்தின் கதை

புலிகளின் தோல்வியை அடுத்து மகிந்த சிந்தனை ஆட்சியின் பேரினவாதச் செய்நிரல் துரிதமாக முன்னெடுக்கப்படும் ஒரு சூழலிற், கூட்டமைப்பின் அரசியல் இயலாமையின் அரசியலாகவே இருந்துவருகிறது.

இலகு முகவரி : **valai.thulaa.net/65**

http://thulaa.net/home/archives/344

### பாட்டொன்று கேட்டேன்

தமிழ்த்திரையிசையின் வரலாற்றையும் பரிணாமத்தையும் எடுத்துக்காட்டும் ஆவணப்பெட்டகம். 75 பகுதிகளைக் கொண்டது. ஒலி வடிவில் கேட்டு மகிழலாம். பி.பி.சி. தமிழோசைக்காக தயாரித்து வழங்கியவர் திரு.சம்பத்குமார்.

இலகு முகவரி : **valai.thulaa.net/66**

http://www.bbc.co.uk/tamil/highlights/story/2004/08/040805_filmsongs.shtml

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA